ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1861/45 - 2014 මැයි මස 10 වැනි සෙනසුරාදා - 2014.05.10

*1861/45 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 6/2001*

### *2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டம்*

*2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 78 (4) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தலைவர்,
இலங்கைக் காப்புறுதிச் சபை,
(இலங்கைக் காப்புறுதிச் சபைக்காக கையொப்பமிடப்பட்டது).

கொழும்பு,
2014, மே 09.

விதிகள்

1. இவ்விதிகள் 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, (தனியாட்கள் தவிர்ந்த) காப்புறுதி முகவர் தகைமைகள் விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. சட்டத்தின் கீழ் முகவரொருவராக நியமிக்கப்படும் நோக்கத்துக்காக, தனியாட்கள் தவிர்ந்த எவரேனுமாளிடமிருந்து தேவைப்படுத்தப்பட்ட தகைமைகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) அத்தகைய ஆள் –

(i) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும், பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத கூறப்பட்ட மூலதனத்தைக் கொண்டதும், மற்றும் இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவான குறைந்தபட்ச தேறிய மூலதனத்தை எல்லா நேரங்களிலும் பேணுகின்றதுமான கம்பெனியொன்று;

(ii) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழிற் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனியொன்று;

(iii) 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைத் தாபனமொன்று ; அல்லது

(iv) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் அல்லது ஒரு மாகாண சபையின் இயைபான நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும், காப்புறுதி முகவரொருவராகத் தொழிற்படுவதற்கு அதன் துணைவிதிகளில் குறிப்பான குறிப்பீட்டைக் கொண்டுள்ளதும், அத்தகைய துணைவிதி 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் அல்லது அந்த மாகாண சபையின் இயைபான நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கூட்டுறவுச் சங்கமொன்று,

ஆகவிருத்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய ஆள், காப்புறுதி முகவரொருவராகச் செயலாற்றுவதற்கு அல்லது அதிகாரமுள்ளதாகவிருப்பதற்கு அதன் தொழிற் செயற்பாட்டை ஆளுகின்ற, ஒழுங்குபடுத்துகின்ற அல்லது மேற்பார்வை செய்கின்ற ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் ;

(இ) அத்தகைய ஆள், நிதிக் கையாடல் அல்லது மோசடி என்ற ஏதுக்களின் மீது ஒரு காப்புறுதியாளராக, தரகராக, அல்லது வங்கியாக அல்லது நிதி நிறுவனமாகச் செயலாற்றுவதிலிருந்து அல்லது அதிகாரமுள்ளதாகவிருப்பத்திலிருந்து அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டிராதவராகவிருத்தல் வேண்டும்;

(ஈ) அத்தகைய ஆளின் பணிப்பாளரொருவர் -

(i) நிதி முகாமை சம்பந்தமாகப் புரியப்பட்ட தவறொன்றுக்காக அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்காக, இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிராதவிடத்து ;

(ii) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிராதவிடத்து;

(iii) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஒரு நீதிமன்றத்தினால் சித்தசுவாதீனமற்றவரென வெளிப்படுத்தப்பட்டிராதவிடத்து ;

(iv) ஒரு தனிசை மீள் கொடுப்பனவு செய்தல் தொடர்பாக, இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பை அல்லது கட்டளையைத் திருப்தி செய்வதற்குத் தவறியிராதவராகவிருக்குமிடத்து ;

(v) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே எவரேனும் காப்புறுதியாளர், காப்புறுதித் தரகர், வங்கி, நிதி நிறுவனம் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்பவற்றில் அல்லது அவற்றுடன் ஒரு பணிப்பாளராக, பிரதான நிறைவேற்றலுவலராக அல்லது அதிகாரம் கொண்ட வேறேதேனும் பதவியில் சேவையாற்றுவதிலிருந்து ஓர் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையின் கட்டளையின் மூலம் அகற்றப்பட்டிருக்காதவராகவிருக்குமிடத்து அல்லது இடைநிறுத்தப்பட்டிராதவராகவிருக்குமிடத்து ; அல்லது

(vi) எந்தக் காப்புறுதியாளருக்கு, காப்புறுதித் தரகருக்கு, வங்கிக்கு, நிதி நிறுவனத்துக்கு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு -

(அ) ஒரு காப்புறுதியாளராக அல்லது காப்புறுதித் தரகராக அல்லது வங்கியாக அல்லது நிதி நிறுவனமாக அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவாகத் தொழிற்படுவதற்காக வழங்கப்பட்ட உரிமம் அல்லது வேறு அதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதோ அல்லது ஒரு காப்புறுதியாளராக, காப்புறுதித் தரகராக அல்லது வங்கியாக அல்லது நிதி நிறுவனமாகத் தொழிற்படுவதற்கு வழங்கப்பட்ட உரிமத்தின் அல்லது வேறு அதிகாரத்தின் புதுப்பித்தல் மறுக்கப்பட்டுள்ளதோ ; அல்லது

(ஆ) எந்தக் காப்புறுதியாளர், காப்புறுதித் தரகர், வங்கி, நிதி நிறுவனம் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே வலுக்கட்டாயமாக ஒடுக்கப்பட்டுள்ளதோ,

அந்த ஏதேனும் காப்புறுதியாளர், காப்புறுதித் தரகர், வங்கி, நிதி நிறுவனம் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்பவற்றில் அல்லது அவற்றுடன் பணிப்பாளரொருவராக, பிரதான நிறைவேற்றலுவலரொருவராக, பிரதான அலுவலரொருவராக அல்லது குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவராகவிராதவிடத்து அல்லது வேறேதேனும் அதிகாரம் கொண்ட பதவியை வகித்திராதவிடத்து ; அத்துடன்

(உ) அத்தகைய ஆளுக்காக அல்லது அவர் சார்பில் காப்புறுதித் தொழிலைப் பரிந்து கேட்பதில் அல்லது பெறுவதில் ஈடுபடவேண்டிய அத்தகைய ஆளின் பணியாட்டொகுதி உறுப்பினர்களை அத்தகைய ஆள் தெளிவாக இனங்காணுதல் வேண்டும். அத்தகைய பணியாட்டொகுதி உறுப்பினர்கள், 2002 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதிய 1255/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் காப்புறுதி முகவர் தகைமைகள் விதிகளின் நியதிகளின்படி தகைமைபெற்ற காப்புறுதி முகவர்களாகவிருத்தல் வேண்டும்.

3. இவ்விதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய :-

"சட்டம்" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டம் என்று பொருளாகும் ;

"வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றையும் விசேட வங்கியொன்றையும் உள்ளடக்குதல் வேண்டும் ;

"தரகர்" என்பது, சட்டத்தின் கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"நிதி நிறுவனம்" என்பது, 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமளிக்கப்பட்ட நிதித் கம்பெனியொன்றையும், 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைத் தாபனமொன்றையும் உள்ளடக்குதல் வேண்டும் ;

"காப்புறுதித் தொழில்" என்பது, சட்டத்தின் கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

"காப்புறுதியாளர்" என்பது, சட்டத்தின் கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5- 763

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.